வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2803 /ஆ1/2021, நாள் 08.09.2021

- - -

| | |
|---|---|
| பொருள் : | பள்ளிக்கல்வி - கொரோ பெருந்தொற்று தடுப்பூசிகள், பள்ளிக்கல்வி துறையில் பணிபுரியும் அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளஅறிவுறுத்தல் - சார்பாக. |
| பார்வை : | வேலூர் மாவட்ட ஆட்சியரின் 27.08.2021 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகள். |

- - -

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி ஆய்வு கூட்டத்தில் தெரிவித்த அறிவுரைகளின்படி கொரோனா பெருந்தொற்று பரவலை தடுக்கும் பொருட்டு வேலூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறையில் பணிபுரியும் அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் 100% தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளமையால், பள்ளிக்கல்வி துறையில் உள்ள அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் தாங்கள் பணிபுரயும் பள்ளிகள் மற்றும் வசிக்கும் பகுதியில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள மாவட்ட ஆட்சியரால் பெரும்பாலான சிறப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதால் அனைவரும் தங்களின் நலன், தங்கள் குடும்ப உறுப்பினர்கள் நலன் கருதியும் மற்றும் பள்ளி மாணவர்களின் நலன் கருதியும் மேற்படி அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாமில் கண்டிப்பாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தற்போது கொரோ நோய்தொற்று மூன்றாம் அலை வருமாயின் அந்நோயின் தாக்கம் குழந்தைகள்/ மாணாக்கர்கள் பாதிக்கக்கூடும் என சுகாதார வல்லுநர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டுவருவதால் அந்த நிலை வராமல் பாதுகாத்திடவும் அதை எதிர்கொள்வதற்கும் அனைவரும் 100% தடுப்பூசி கண்டிப்பாக செலுத்திக்கொள்ள வேண்டுமென மீளவும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளியில் அனைத்துவகை ஆசிரியர்களும் கொரோனா தடுப்பூசி போட்டு விட்டார்களா என உறுதி செய்தல் வேண்டுமெனவும், ஆசிரியர்கள்/ ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஒன்று/ இரண்டு தவணை தடுப்பூசி போட்டவர்கள் விவரம் தலைமையாசிரியர் மேசையில் வைக்கப்பட வேண்டுமெனவும்,, தடுப்பூசி போட்டமைக்கான சான்றினையும் 13.09.2021க்குள் பெற்று தொகுத்து வைக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் பெற்றோர்களிடம் தொலைபேசி மற்றும் வாட்ஸ்ஆப் மூலம் மேற்கூறியவாறு கண்டிப்பாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டுமென வகுப்பாசிரியர் மூலமாக விழிப்புணர்வினை ஏற்படுத்திடுமாறு கேட்டுக்கொள்வதுடன் இரு தினங்களுக்குள் சிறப்பு, முகாம்களை பயன்படுத்தி தடுப்பூசி செலுத்திக்கொள்ள பெற்றோர்களுக்கு தெரிவிக்குமாறும் அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பள்ளி மாணவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்ட விவரத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி கடிதத்தின்படி பெற்றோர்களால் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து **திங்கட்கிழமை மாலைக்குள்** பெற்று ஒரு பிரதி பள்ளியிலும் மற்றொரு பிரதியை தொகுத்து வேலூர் மாவட்டக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தடுப்பூசி எடுத்துக்கொள்ளாத ஆசிரியர்கள்/ ஆசிரியரல்லாத பணியாளர்கள் மூலம் பள்ளி மாணாக்கர்களுக்கு கொரோனா பெருந்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் இதில் எவ்வித சுணக்கமும் ஏற்படக்கூடாது எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : பெற்றோர் அளிக்கும் மாதிரி படிவம்

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்
2. மாவட்டக்கல்வி அலுவலர், வேலூர்